# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00
மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2008 பெற்றது.)



பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் தமிழ்த்துறை நடத்தும்

## தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

# தன்னம்பிக்கைத்தமிழ்

தமிழ்த்துறை வெளியீடு

27.09.2016

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தன்னம்பிக்கைத் தமிழ் |
| பொருள் | : | தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனை தொடர்பான கட்டுரைகள். |
| பதிப்பாசிரியர் | : | முனைவர்.ச.மகாதேவன்<br>தமிழ்த்துறைத் தலைவர் |
| இணைப்பதிப்பாசிரியர்கள் | : | திரு.அ.மு.அயூப்கான்<br>இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>முனைவர் அ.சே.சேக்சிந்தா<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>திரு.ஜெ.குமார்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை |
| பதிப்பு | : | செப்டம்பர் 2016 |
| உரிமை | : | தமிழ்த்துறை,<br>சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி) |
| ISBN | : | 938597756-3 |
| மொழி | : | தமிழ் |
| தாள், அளவு | : | காப்பியர், |
| பக்கங்கள் | : | 109 |
| விலை | : | ரூ.170/– |
| வெளியீடு | : | ஷான்லக்ஸ் பதிப்பகம்<br>61/66, வி.பி.காம்ப்ளக்ஸ், டி.பி.கே.மெயின் ரோடு<br>மதுரை |
| கணினி அச்சாக்கம் | : | கா.மானேந்தியப்பன்<br>காசி கணினிக் கலையகம்<br>41, தெற்குக் கடைவீதி, பாளையங்கோட்டை<br>கைபேசி : 9443614556 |

# முதுமொழிக்காஞ்சியில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

முனைவர் திருமதி சி. அருள் மைக்கேல் செல்வி
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை – 625 018.

## முன்னுரை

**"Positive Thinkings always ever success
Negative Thinkings always never success"**

'எண்ணங்களே வாழ்க்கையை அமைக்கின்றன' என்பதற்கேற்ப ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களே அவன் வாழ்க்கைக்குக் காரணமாய் அமைகின்றன. வாழ்வதற்கும் வாழ்வில் உயர்வதற்கும் தன்னம்பிக்கை அவசியம். விடாமுயற்சி, கடின உழைப்பு, திட்டமிடல் போன்ற குணநலங்கள் தன்னம்பிக்கை என்ற அடித்தளத்திலிருந்துதான் உருவாகி வெளிவருகின்றன. தன்னம்பிக்கை என்பது ஓர் உந்துசக்தி. மனித சமுதாயத்திற்கு உந்து சக்தியாகத் திகழும் தன்னம்பிக்கைச் சிந்தனைகளைத் தாங்கிய நூல் முதுமொழிக்காஞ்சி ஆகும். மதுரைக் கூடலூர் கிழார் எழுதிய இந்நூல் பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வோர் அதிகாரமும் பத்துச் செய்யுள்களைக் கொண்டு குறள்தாழிசையில் அமைந்துள்ளது. இக்குறள்தாழிசையில் அமைந்துள்ள தன்னம்பிக்கைச் சிந்தனைகளைக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஒழுக்கம் உடைமை

மனிதராகப் பிறந்தவர்களுக்கு ஒழுக்கம் மிகவும் இன்றியமையாதது. ஒழுக்கமே ஒருவனுக்கு மேன்மையைத் தரும். உயிரை விடச் சிறந்தது ஒழுக்கம் ஆகும். நல்ல ஒழுக்கம் நன்மை விளைவதற்கான விதை போன்றதாகும். முதுமொழிக்காஞ்சியும் கடல் சூழ்ந்த இந்த உலகத்திலே பிறந்த மக்களுக்கெல்லாம் கற்றலைப் பார்க்கிலும் ஒழுக்கம் உடைமையே சிறந்தது என்கிறது. இதனை,

**"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்
ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"** (மு.கா.,1)

என்ற அடிகளால் அறியலாம்.

## கற்றது மறவாமை

'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பது வள்ளுவம். தலைமுடியின் அழகும் வண்ணமிகு ஆடையின் அழகும் மஞ்சள் அழகும் உண்மையான அழகு ஆகாது. நாம் நல்லவனாக இருக்கிறோம் என்ற உறுதிப்பாட்டினைத் தரும் கல்வியைப் பெறுவதே உண்மையான அழகு என்கிறது நாலடி. ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வி அவன் எழுகின்ற பிறப்புக்களில் எல்லாம் தொடர்ந்து சென்று பாதுகாப்புத் தருவதால் கேடில் விழுச்செல்வம் எனப்பட்டது. கற்றவனுக்கு எந்த நாடும் சொந்த நாடு ஆகும். சென்ற இடம் எல்லாம் சிறப்புத் தரும் கல்வியைக் கற்றால் மட்டும் போதாது. அதை மறக்காமலும் இருத்தல் வேண்டும். ஏனெனில் அறிவு நுட்பத்தை விட மேலானது கற்றது மறவாமை. இதையே,